# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.31/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | ராமலிங்கம் |
| Father’s Name | : | மாணிக்க முதலியார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 11.07.2025.

1, 3, 4 எதிரிகள் ஆஜர். 2, 5, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2, 5, 6, 7 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். 6ம் எதிரி கோபு மட்டும் ராயநந்தல் ஊரை சேர்ந்தவர். 1ம் எதிரி ரங்கநாதனுக்கும் எனக்கும் நில தகராறு இருந்து வருகிறது. 19.01.2021ம் தேதி எனது மகன் மோகனபிரியன் கொல்லைக்கு மாட்டிற்கு தண்ணீர் காட்டச்சென்றான். அப்போது 2ம் எதிரி ரங்கநாயகி எனது மகனை வழிமடக்கி எனக்கு மயக்கமாக இருக்கிறது என்னை ஊருக்கு அருகாமையில் அழைத்து சென்றுவிடு என்று கூறினார். அதனால் என் மகன் அழைத்துச்சென்று ஊர் அருகாமையில் ஆலமரத்து அடியில் விட்டுவிட்டார். அதனை எனது ஊரை சார்ந்தவர்கள் 10 நபர்கள் பார்த்தார்கள். மறுநாள் என்மகன் மீது ரங்கநாதன் மற்றும் ரங்கநாயகி வழிபறி புகார் பொன்னூர் காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். அதற்கு மறுநாள் சென்று 20.01.2021ம் தேதி 3ம் எதிரி சீனுவாசனிடம் கேட்டேன். அதற்கு 3ம் எதிரி என்னை தெவடியா பையா என்னையும் என் மகனையும் சாகடிக்காமல் விடமாட்டேன் என்று ஆவேசமாக திட்டினார். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பின்னர் 21ம் தேதி 1 முதல் 7 எதிரிகள் என்னை பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள்.அங்கு என்னிடம் ரூ.50,000/-ம் கொடுத்தால் உன் மகன்மீது கொடுத்த புகாரை வாபஸ் பெற்றுவிடுகிறோம் இல்லையென்றால் நீயும், உன் மகனும் ஜெயிலுக்குதான் செல்லவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு நான் என் மகன் எந்த தவறும் செய்யவில்லை அதனால் பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். இது சம்மந்தமாக என்னை பொன்னூர் காவல் நிலையம் செல்லவிடாமல் என்னை மிரட்டினார்கள் அதனால் நான் ஆன்லைன் மூலமாக எதிரிகள்மீது புகார் கொடுத்தேன். அந்த புகாரின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன்.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**